


APRIL 01 முதல்... 2025

# TNPSC

SPECIAL OFFER
UPTO 10% OFF

புதிய பாடத்திட்டம்

# பொதுத்தமிழ்

பாகம் - 3

- இலக்கியம்,
- தமிழ் அறிஞர்களும்,
- தமிழ்த்தொண்டும்

புத்தக தேவைக்கு :

COURIER & தபாலில் பெற

9566974903, 8940077756

https://www.tafiasacademy.in/shop/

ORDER NOW

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

**TAF IAS ACADEMY**

தமிழகம் முழுவதும் 60 கிளைகள் - 16 ஆண்டுகளில் 15985+ பேருக்கு அரசுப்பணி...

AAMU PUBLICATION
TENKASI

புதிய பாடத்திட்டம்

# பொதுத்தமிழ்

பாகம் - 3

## TNPSC Group - II, IIA Group - IV



## இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்



உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

TAF IAS ACADEMY

THINK YOU CAN

தமிழகம் முழுவதும் 60 கிளைகள் - 16 ஆண்டுகளில் 15985+ பேருக்கு அரசுப்பணி...

J.ஆகாச மூர்த்தி M.Com., LL.B.,
FOUNDER, TAF IAS ACADEMY

# TNPSC

# GROUP – II, IIA & IV

## பொதுத்தமிழ் (புதிய பாடத்திட்டம்)

### அலகு - VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

## பாகம் - III




Coaching for :
UPSC - TNPSC
POLICE - SI
TET -TRB - SSC
BANKING
RAILWAY

புத்தக தேவைக்கு (கூரியர் & தபால்) பெற...
செல் : 95669 74903

16 ஆண்டுகளில் 15985+பேருக்கு அரசுப்பணி
தமிழகம் முழுவதும் 60 கிளைகள்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

TAF IAS ACADEMY

tafiasacademyho@gmail.com www.tafiasacademy.in TAF IAS ACADEMY / TAF POLICE

திரு. J.ஆகாச மூர்த்தி M.Com.,LLB.,
நிறுவனர், TAF IAS ACADEMY

திரு. M.மாரியப்பன் M.Com.,
நிர்வாக இயக்குநர், TAF IAS ACADEMY

Head Office : TENKASI

9597587300 TAF IAS ACADEMY

## பதிப்புரிமை

ஆசிரியரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இப்புத்தகத்தை மறுபதிப்பு செய்யவோ வேறு மொழிகளில் மொழி பெயர்க்கவோ, அச்சடிக்கவோ கூடாது.



| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பொதுத்தமிழ் (பாகம் - III) |
| ஆசிரியர் | : | TAF தமிழ்த்துறை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, ஏப்ரல் 2025 |
| பக்கங்கள் | : | 296 பக்கங்கள் |
| விலை | : | ரூ.400 /— |

இப்புத்தக உருவாக்கத்திற்கு உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி...!

AAMU PUBLICATION

MOBILE 95669 74903, 89400 77746

WEBSITE www.tafiasacademy.com

E-MAIL tsiacademyho@gmail.com

FACEBOOK TNPSC – LIFE (TAF)

YOUTUBE : TAF IAS ACADEMY

TELEGRAM : TAF IAS ACADEMY

259/81 C, KOOLAKADAI BAZAR STREET,
TENKASI,Tirunelveli, Tamil Nadu, 627811

**Thanks To All The Contributors Of This Book..**

# பாடத்திட்டம்

## பகுதி இ: பொதுத்தமிழ் (பத்தாம் வகுப்புத் தரம் – 100 கேள்விகள்)

## தமிழ் தகுதித்தேர்வு மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

### அலகு I : இலக்கணம் (25 வினாக்கள்)

எழுத்து: பிரித்து எழுதுதல் - சேர்த்து எழுதுதல் - சந்திப்பிழை - குறில், நெடில் வேறுபாடு - லகர, ளகர, ழகர வேறுபாடு - னகர, ணகர வேறுபாடு - ரகர, றகர வேறுபாடு - இனவெழுத்துகள் அறிதல் - சுட்டு எழுத்துகள் - வினா எழுத்துகள் - ஒருமைப் பன்மை அறிதல்.

சொல்: வேர்ச்சொல் அறிதல் - வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் - அயற்சொல் - தமிழ்ச்சொல், எதிர்ச்சொல் - வினைச்சொல் - எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் - இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல்.

### அலகு II : சொல்லகராதி (15 வினாக்கள்)

(i) எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்,ஓரெழுத்து ஒரு மொழி,உரிய பொருளைக் கண்டறிதல் - ஒருபொருள் தரும் பல சொற்கள், பொருந்தா சொல்லைக் கண்டறிதல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்; ஒருபொருள் பன்மொழி - இருபொருள் குறிக்கும் சொற்கள் - பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு - சொல்லும் பொருளும் அறிதல் - ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல்.

(ii) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் - (எ.கா.) பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுதல் சிறப்பு (பயிலுதல், எழுதுதல்) - வானில் முகில் தோன்றினால் மழை பொழியும் (முகில், நட்சத்திரம்); பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் - (எ.கா.) ஊடகம் - தகவல் தொடர்புச் சாதனம் (செய்தி, தகவல் தொடர்புச் சாதனம்) - சமூகம் - மக்கள் குழு (மக்கள் குழு, கூட்டம்); ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக - (எ.கா.) புதுச்சேரி - புதுவை, மன்னார்குடி - மன்னை, மயிலாப்பூர் - மயிலை; பிழை திருத்துக. (எ.கா.) ஒரு - ஓர்; பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் - (எ.கா.) வெத்தில - வெற்றிலை, நாக்காலி - நாற்காலி.

(iii) பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் - (எ.கா.) நேத்து மழ பேஞ்சுது - நேற்று மழை பெய்தது; சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்: மற்றும் அல்லது, ஆல், பிறகு, வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால்; அடைப்புக்குள் உள்ளச் சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் - (எனவே, ஏனெனில், ஆகையால், அதுபோல, அனால், வரை, பின்பு) - (எ.கா.) நான் காட்டிற்குச் சென்றேன். அதனால் புலியைப் பார்த்தேன் - மாலைநேரம் முடியும் வரை விளையாடுவேன். தேர்வு முடிந்த பின்பு சுற்றுலா செல்லலாம்; பொருள் தரும் ஓர் எழுத்து - (எ.கா). ஆ - பசு, ஈ-கொடு, தை-மாதம், தீ-நெருப்பு; பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக - (எ.கா.) கமலம், கஞ்சம், முளரி, பங்கயம், இச்சொற்கள் தாமரையைக் குறிக்கும்.

## அலகு III : எழுதும் திறன் (15 வினாக்கள்)

(i) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் - தொடர் வகைகள் - செய்வினை, செயப்பாட்டு வினை - தன்வினை, பிறவினை - ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்.

(ii) மரபுத் தமிழ்: திணை மரபு - உயர்திணை: அம்மா வந்தது - அம்மா வந்தாள்; அஃறிணை: மாடுகள் நனைந்தது - மாடுகள் நனைந்தன: பால் மரபு: ஆண்பால்: அவன் வந்தது - அவன் வந்தான்; பெண்பால்: அவள் வந்தது - அவள் வந்தாள்; பலர் பால்: அவர்கள் வந்தார்கள் - அவர்கள் வந்தனர்; ஒன்றன் பால்: அது வந்தன - அது வந்தது; பலவின் பால்: பறவைகள் பறந்தனர் - பறவைகள் பறந்தன; காலம்: நேற்று மழை பெய்யும் - நேற்று மழை பெய்தது; நேற்று வருவேன் - நேற்று வந்தேன்; இளமைப் பெயர்: பசு - கன்று; ஆடு - குட்டி; ஒலிமரபு: நாய் கத்தியது - நாய் குரைத்தது; வினைமரபு: கூடைமுடை, சோறு உண்; தொகை மரபு: மக்கள் கூட்டம் - ஆட்டு மந்தை; நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்.

## அலகு IV : கலைச் சொற்கள் (10 வினாக்கள்)

பல்துறை சார்ந்த கலைச் சொற்களை அதாவது அறிவியல், கல்வி, மருத்துவம், மேலாண்மை, சட்டம், புவியியல், தொழில்நுட்பம், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்களை அறிந்திருக்க வேண்டும். (உதாரணம்: தேடு பொறி - Search Engine, வலசை - Migration, ஒவ்வாமை - Allergy, மரபணு - Gene, கடல் மைல் - Nautical Mile)

## அலகு V : வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் (15 வினாக்கள்)

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - செய்தித்தாள் - தலையங்கம் - முகப்புச் செய்திகள் - அரசு சார்ந்த செய்திகள் - கட்டுரைகள் - இவற்றை வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் - உவமைத் தொடரின் பொருளறிதல் - மரபுத் தொடரின் பொருளறிதல் - பழமொழிகள் பொருளறிதல் - ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.

## அலகு VI : எளிய மொழி பெயர்ப்பு (5 வினாக்கள்)

ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் - பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் வேண்டும் (சான்று: Pendrive, Printer, Computer, Keyboard) - ஆவணங்களின் தலைப்பு - கோப்புகள் - கடிதங்கள் - மனுக்கள் - மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்.

## அலகு VII : இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் (15 வினாக்கள்)

திருக்குறள் தொடர்பான செய்திகள் (இருபது அதிகாரங்கள் மட்டும்) ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை - மேற்கோள்கள் - அறநூல் தொடர்பான செய்திகள் (நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்) - தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் - உ.வே.சாமிநாத ஐயர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் - தேவநேய பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜி.யு.போப், வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் - தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்: பாவேந்தர், டி.கே.சிதம்பரனாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாரா பாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி, உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்.

(குறிப்பு : அலகு VII-க்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு வரையிலான (upto SSLC Standard) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது.)

**போட்டித்தேர்வு மாணவர்களின் கவனத்திற்கு,**

- TNPSC வெளியிட்டுள்ள புதியப் பாடத்திட்டத்தில் பொதுத்தமிழ் பகுதி மொத்தம் VII அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- இதில் அலகு I & II ஆகிய தலைப்புகள் பாகம் - I ஆகவும், அலகு III, IV, V & VI ஆகிய தலைப்புகள் பாகம் - II ஆகவும், VII ஆவது அலகு பாகம் - III ஆகவும் மொத்தம் 3 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


| அலகு VII : இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் | | |
|---|---|---|
| **வரிசை எண்** | **தலைப்பு** | **பக்க எண்** |
| **1.** | **திருக்குறள் தொடர்பான செய்திகள்** | 01 - 29 |
| | 1.1 இருபது அதிகாரங்கள் மட்டும் | 30 - 49 |
| | 1.2 திருக்குறள் மேற்கோள்கள் | 50 |
| **2.** | **அறநூல் தொடர்பான செய்திகள்** | 51 - 91 |
| | 2.1 நாலடியார் | 56 - 59 |
| | 2.2 நான்மணிக்கடிகை | 60 - 61 |
| | 2.3 பழமொழி நானூறு | 62 - 64 |
| | 2.4 முதுமொழிக் காஞ்சி | 65 - 67 |
| | 2.5 இன்னாநாற்பது | 67 - 70 |
| | 2.6 திரிகடுகம் | 71 - 73 |
| | 2.7 சிறுபஞ்சமூலம் | 74 - 75 |
| | 2.8 ஏலாதி | 76 - 78 |
| | 2.9 அவ்வையார் பாடல்கள் | 78 - 91 |
| **3.** | **தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்** | 92 - 164 |
| **4.** | **தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்:** | 165 - 170 |
| | 4.1 உ.வே.சாமிநாத ஐயர் | 165 - 167 |
| | 4.2 தெ.பொ.மீனாட்சி சுந்தரம் | 168 - 169 |
| | 4.3 சி.இலக்குவனார் | 169 - 170 |

| | | |
|---|---|---|
| 5. | **தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள்:** | 171 - 198 |
| | 5.1 தேவநேய பாவாணர் | 171 - 178 |
| | 5.2 அகரமுதலி | 179 - 182 |
| | 5.3 பாவலரேறு பெருஞ்சித்திரனார் | 182 - 186 |
| | 5.4 ஜி.யு.போப் | 187 - 189 |
| | 5.5 வீரமாமுனிவர் | 189 - 198 |
| 6. | **தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்:** | 199 - 288 |
| | 6.1 பாவேந்தர் | 199 - 224 |
| | 6.2 டி.கே.சிதம்பரனாதர் | 225 - 229 |
| | 6.3 தவத்திரு குன்றக்குடி அடிகளார் | 230 - 233 |
| | 6.4 கண்ணதாசன் | 234 - 242 |
| | 6.5 காயிதே மில்லத் | 243 - 245 |
| | 6.6 தாரா பாரதி | 246 - 250 |
| | 6.7 வேலுநாச்சியார் | 251 - 252 |
| | 6.8 பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் | 253 - 255 |
| | 6.9 முடியரசன் | 256 - 260 |
| | 6.10 தமிழ் ஒளி | 261 - 267 |
| | 6.11 உருத்திரங்கண்ணனார் | 268 - 275 |
| | 6.12 கி.வா.ஜகந்நாதர் | 276 - 280 |
| | 6.13 நாமக்கல் கவிஞர் | 281 - 288 |

# 1 திருக்குறள் தொடர்பான செய்திகள்

அலகு -VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

## திருக்குறள் ஓர் அற இலக்கியம் :

- உலகப் பண்பாட்டிற்கு தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் திருக்குறள்.
- திருக்குறள் தமிழர் திருமறை, உலகப் பொதுமறை, அற இலக்கியம் என பெருமையுடன் அழைக்கப்படுகிறது.
- திருக்குறளில் இல்லாத செய்திகளே இல்லை. ஏழு சொற்களில் மனிதர்களுக்கு அறத்தைக் கற்றுத்தரும் நூல் திருக்குறள்.
- மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் திருக்குறள்.
- நீதி நூல்களின் நந்தா விளக்கம் – திருக்குறள்.
- திருக்குறள் நீதி நூல் மட்டும் அன்று. இஃது ஒரு வாழ்வியல் நூல்.

## உலகப் பொதுமறை :

- மக்கள் பயனுள்ள முறையில் வாழ வழிகாட்டியாக அமைபவை அறநூல்கள்.
- அறநூல்களில் "உலகப் பொதுமறை" என்று போற்றப்படும் சிறப்பு பெற்றது நம் திருக்குறள்.
- எக்காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துக்களை கொண்ட நூல் என்பதால் உலகப் பொதுமறை எனப்படுகிறது.
- இனம், நாடு, மொழி குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை நூல் திருக்குறள்.
- திருக்குறள் எந்தவொரு மனிதனையோ, அரசனையோ போற்றிப் புகழவில்லை. அது மனிதத்தையே போற்றுகிறது.

TAF IAS ACADEMY

## பல மொழிகளில் திருக்குறள் :

- தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் திருக்குறள் ஆகும்.
- உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு பலராலும் படிக்கப்பட்டு வருகிறது.
- இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல் மிக்க அறக்கருத்துக்களால் இடம் பெற்றது திருக்குறள்.
- மனித வாழ்வின் மேன்மைகளை, வாழ்வின் நெறிகளை மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றும் முன்னரே வகுத்துக் காட்டிய நூல் திருக்குறள்.
- உலக மொழிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

## முப்பால் :

- மக்கள், வாழ்வில் அடையத்தக்க உறுதிப்பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளையும் விரித்து உரைப்பது திருக்குறள். எனவே, இந்நூல் "முப்பால்" எனவும் அழைக்கப்படுகிறது.

## பதினெண்கீழ்க்கணக்கு நூல் :

- திருக்குறள் சங்கம் மருவிய இலக்கியத்தில் வைத்து எண்ணப்படுகிறது.
- மேன்மையான கருத்துக்களை குறள் வெண்பாக்களால் கூறும் நூல் ஆதலின் திருக்குறள் எனப் பெயர்பெற்றது.
- தமிழ் இலக்கியத்தில் மிகக் குறுகிய அடிகளால் (ஒன்றே முக்கால் அடி) ஆன பெரிய நூல் திருக்குறள்.

## அறிஞர் பலர் போற்றிய நூல்

- திருக்குறளையோ அதன் கருத்துக்களையோ எடுத்து ஆளாத அறிஞர் பெருமக்கள் இலர் என்று கூறும் அளவிற்கு பெருமை பெற்றுள்ளது.
- "இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என கூறும் அளவுக்கு உலகப் பொதுமறையாய் உள்ள நூல் – திருக்குறள்.
- திருக்குறளை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய நூல் என்றும், திருவள்ளுவரை தத்தம் சமயத்தவர் என்றும் கூறும் அளவிற்கு பெருமை உடையது.
- திருக்குறளின் பெருமைகளைக் கூற திருவள்ளுவமாலை எனும் ஒரு தனி நூலே புலவர்கள் பலரால் இயற்றப்பட்டுள்ளது.
- திருக்குறளின் சிறந்த கருத்துக்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, பதிற்றுப்பத்து போன்ற பலநூல்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

## திருக்குறளின் நோக்கம்

- மனிதனின் வாழ்க்கையை பகுத்து நோக்கி அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மை பயனை அறிய வைத்து பயனுடைய வாழ்க்கை வாழ அவனுக்கு வழிகாட்டுவதே திருக்குறளின் முதன்மை நோக்கம்.
- இதற்கேற்ப திருக்குறளானது காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து மனித வாழ்வை வளப்படுத்துகிறது.

## திருக்குறள் நூலமைப்பு

- திருக்குறள் – திரு + குறள். (குறள் – குறுகிய அடி)
- திரு – சிறப்பு அடைமொழி, குறள் – இரண்டடி வெண்பா.
- திரு – செல்வம், அழகு, மேன்மை, தெய்வத்தன்மை எனப் பல பொருள் உள்ளது.
- குறள் என்பது குறட்பாவை உணர்த்தாமல் அப்பாக்களால் ஆகிய நூலை உணர்த்துவதால் ஆகுபெயர். எனவே, திருக்குறள் என்பது அடையடுத்த ஆகுபெயர் என்றும், அடையடுத்த கருவி ஆகுபெயர் என்றும் அழைக்கப்படுகின்றது.
- பாவின் வகையைத் தன் பெயராகக் கொண்டு உயர்வு விகுதியாகக் கொண்டு "திரு" என்ற அடைமொழியோடு அழைக்கப்படுகிறது.
- குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். ஏழு சீர்களைக் கொண்ட 2 அடி வெண்பாக்களால் ஆகிய நூல்.
    - அறத்துப்பால் – தனிமனிதனது வாழ்வின் மேன்மையை குறிக்கும்.
    - பொருட்பால் – சமுதாய வாழ்வை காட்டும்.
    - காமத்துப்பால் – அகவாழ்வின் வெற்றியினைப் பேசும்.
- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் மற்றும் இன்பத்துப்பால் என 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- 133 அதிகாரம் கொண்டது. அதிகாரத்திற்கு 10 பாடல்கள் வீதம் 1330 குறள் கொண்டது.
- இது பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று.
- பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் அதிக அறக்கருத்துக்களை கூறும் நூல் திருக்குறள்.

## 1.1 இருபது அதிகாரங்கள் மட்டும்

| 1. அறன் வலியுறுத்தல் (அதிகாரம் - 4) | |
|---|---|
| **குறள்** | **பொருள்** |
| சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு<br>ஆக்கம் எவனோ உயிர்க்கு. – குறள் 31<br>**அருஞ்சொற்பொருள் :** ஈனும் – தரும்,<br>ஆக்கம் – செல்வம் (அ) நன்மை | அறம் சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும்; ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு எதுவும் இல்லை. |
| அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை<br>மறத்தலின் ஊங்கில்லை கேடு. – குறள் 32.<br>**அருஞ்சொற்பொருள் :** ஊங்கு – மிகுதி | ஒருவருடையவாழ்க்கைக்குஅறத்தைவிடநன்மையானதும் இல்லை; அறத்தை போற்றாமல் மறப்பதை விடக் கொடியதும் இல்லை. |
| ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே<br>செல்லும்வாய் எல்லாஞ் செயல். – குறள் 33<br>**அருஞ்சொற்பொருள் :** ஓவாதே – விடாமல்,<br>செல்லும் வாய் – செல்லக்கூடிய இடம் | செய்யக்கூடிய வகையால், எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம் அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும். |
| மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்<br>ஆகுல நீர பிற. – குறள் 34<br>**அருஞ்சொற்பொருள் :** மனம் – உள்ளம், மாசு – குற்றம்,<br>அறன் – அறம், மாசிலன் – குற்றமற | ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவனாக இருப்பதே அறம். மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை. |
| அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்றது அறம். – குறள் 35<br>**அருஞ்சொற்பொருள்:** அழுக்காறு–பொறாமை,அவா–பேராசை,<br>வெகுளி – சினம், இன்னாச்சொல் – கடுஞ்சொல். | பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றை நீக்கி நடப்பதே அறமாகும். |
| அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது<br>பொன்றுங்கால் பொன்றாத் துணை. – குறள் 36<br>**அருஞ்சொற்பொருள் :** பொன்றுங்கால் – உடல்நலம் (மனம்)<br>குறைகிற போது, பொன்றா – அழியாத | இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்து கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியா துணையாகும். |
| அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை<br>பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. – குறள் 37<br>**அருஞ்சொற்பொருள் :** அறத்தாறு–அறத்தினால்விளைந்தபயன்,<br>சிவிகை – பல்லக்கு | பல்லக்கை சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா. |
| வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்<br>வாழ்நாள் வழியடைக்கும் கல். – குறள் 38<br>**அருஞ்சொற்பொருள் :** வீழ்நாள் – தவறிய நாள்,<br>படாஅமை – ஏற்படாதவாறு | ஒருவன் அறம் செய்ய தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தை செய்வானானால், அதுவே வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும். |
| அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்<br>புறத்த புகழும் இல – குறள் 39<br>**அருஞ்சொற்பொருள்:**<br>அறத்தான்–காக்கும் நற்செயல்களினால் | அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை. |
| செயற்பால தோரும் அறனே ஒருவற்கு<br>உயற்பால தோரும் பழி. – குறள் 40<br>**அருஞ்சொற்பொருள் :**<br>ஓரும் – ஆராய்ந்தறிந்து தெளிதல். | ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத்தக்கது அறமே. செய்யாமல் காத்துக் கொள்ளத்தக்கது பழியே. |

# 2 அறநூல் தொடர்பான செய்திகள்

## அலகு -VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

- காதல், வீரம் முதலிய சிறந்த உணர்ச்சிகளிலும் இயற்கையின்பத்திலும் ஈடுபட்டிருந்த புலவர்களின் உள்ளம் அடுத்த சில தலைமுறைகளில் நீதிகளைப் பாடும் நிலைக்கு மாறியது. அந்தக் காலத்தைச் சங்கம் மருவிய காலம் அல்லது நீதிநூல் காலம் என்பர்.
- அப்போது நாட்டில் பழைய சேர, சோழ, பாண்டியரின் அமைதியான ஆட்சியில் ஒரு கலக்கம் நேர்ந்தது என்றும், களப்பிரர்கள் என்னும் சிலர் புகுந்து நாட்டு மக்களின் அமைதியைக் கெடுத்தார்கள் என்றும் கூறுவார்கள். ஆகவே, வாழ்க்கை தரும் இன்பங்களைப் பாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.
- வாழ்க்கையே ஒரு சிக்கல் ஆகிவிட்டமையால், சமுதாயத்தில் எப்படி எப்படி வாழ வேண்டும்? என்ன என்ன நீதிகளைப் போற்ற வேண்டும் என்று எடுத்துரைக்க வேண்டிய கடமை புலவர்களுக்கு வந்து சேர்ந்தது.
- அந்தக் காலத்தில் (கி.பி.100 முதல் கி.பி.500 வரையில்) இயற்றப்பட்ட சில நூல்களைப் பதினெண்கீழ்க்கணக்கு என்று குறிப்பிட்டார்கள்.(கீழ்க்கணக்கு என்பது அடிகள் குறைந்த செய்யுட்களால் ஆகிய நூல்களைக் குறிக்கும்).
- இவை களப்பிரர்கள் காலத்தில் இயற்றப்பட்டவை. எனவே இதற்கு இருண்ட காலம் என்றும், இக்காலத்தில் இயற்றப்பட்ட நூல்களுக்கு இருண்ட கால இலக்கியம் என்ற பெயரும் உண்டு.
- மேலும், சமயங்களைச் சார்ந்த நீதிகளை அறிவுறுத்துவதற்காகச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு காவியங்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன.
- சங்கம் மருவிய கால இலக்கிய நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் அழைப்பர்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், நீதிநூல்கள், அறநூல்கள் என்பன எல்லாம் சங்க மருவிய கால இலக்கியங்களைக் குறிப்பதாகும்.
- வச்சிரணந்தியின் திராவிட சங்கத்தில் இயற்றப்பட்டவை என்பதால் சங்க மருவியகால இலக்கிய நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் கூறுவர்.
- மேலும், இக்காலத்தில் புறச் சமயங்களான சமணமும், பௌத்தமும் மேலோங்கி இருந்தது.

TAF IAS ACADEMY

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் தொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்" - (பன்னிரு பாட்டியல்)

- பதினெண்கீழ்க்கணக்கு என்ற பதத்தில் பதினெண் என்றால் 18 என்ற எண்ணுப் பெயரையும், கீழ் என்றால் சிறிய என்ற பொருளையும், கணக்கு என்றால் நூல் என்ற பொருளையும் தருகிறது.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறம், திணை, காலம், இடம், மருந்து என்ற ஐந்தின் அடிப்படையில் பெயர் சூட்டப்பட்டுள்ளன. இந்நூல்கள் எல்லாம் நீதிநூல்கள் அல்ல.
- அவற்றுள் ஆறு நூல்கள் காதல் பற்றியும் ஒரு நூல் போர் பற்றியும் மற்ற பதினொரு நூல்களும் நீதிக் கருத்துக்களைக் கூறுகின்றன.


## 2.1 நாலடியார்



- நான்கடிகளைக் கொண்ட வெண்பாக்களால் இயற்றப்பட்டதினால் நாலடி என அழைக்கப்பட்டு பின்னர் "ஆர்" என்ற சிறப்பு விகுதியும் சேர்ந்து நாலடியார் என அழைக்கப்படுகிறது.
- நாலடியாரில் மொத்தம் 40 அதிகாரங்களும், 12 இயல்களும் உள்ளன. அதிகாரத்துக்குப் 10 பாடல்கள் வீதம் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன.
- மேலும் அறத்துப்பாலில் 13 அதிகாரங்களும், பொருட்பாலில் 24 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 3 அதிகாரங்களும் உள்ளது.
- நாலடியார் வெண்பா என்ற பாவகையைச் சார்ந்தது.
- இந்நூல் பாண்டியநாட்டு சமணமுனிவர்களால் இயற்றப்பட்டது. இந்நூலில் உள்ள பாடல்களைப் பல புலவர்கள் இயற்றியதால் இந்நூல் ஒரு தொகை நூல் என அழைக்கப்படுகிறது.
- பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே ஒரு தொகை நூல் நாலடியார் ஆகும்.
- பதினெண்கீழ்க்கணக்கில் திருக்குறளுக்கு அடுத்து புகழ் பெற்ற நூல் நாலடியார் ஆகும்.
- மேலும் நாலடியாரைத் தொகுத்து அதிகாரங்களை வகுத்தவர் பதுமனார் ஆவார். மேலும், பதுமனார் இந்நூலுக்கு ஓர் உரையும் எழுதியுள்ளார். நாலடியாரை முப்பாலாகப் பகுத்து உரை கண்டவர் தருமர் ஆவார்.
- இந்நூலுக்கு உரை கண்டவர்கள் பதுமனார் மற்றும் தருமர் ஆவர்.
- நாலடியாரின் உரைகளை உள்ளடக்கியது "நாலடியார் உரைவளம்" எனும் நூல் ஆகும்.
- இந்நூல் வேளாண்வேதம், குட்டித்திருக்குறள், நாலடி நானூறு, என்று அழைக்கப்படுகிறது. மேலும், இந்நூலை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் (1893) மொழிபெயர்த்துள்ளார்.
- "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி", என்ற வாசகத்தில் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
- "நாலடி இரண்டடி கற்றவனிடத்தில் வாயடி கையடி செல்லாது" "பழகு தமிழ் சொல்லருமை நால் இரண்டில்"என்ற வாசகத்தில் திருக்குறளின் பெருமையும், நாலடியார் பெருமையும் வெளிப்படுத்தப்படுகிறது.
- மேலும், இந்நூல் தஞ்சையை ஆண்ட முத்தரையரைப் பற்றிக் கூறுகிறது.
- நாலடியாரை மேற்கோள்களுக்குப் பயன்படுத்திய உரையாசிரியர்கள் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், மற்றும் அடியார்க்கு நல்லார் ஆவர்.

> வடிவத்தாலும் கருத்துக்களாலும் குறளின் விரிவாக்கமாகத் திகழ்வதால் "திருக்குறளின் விளக்கம்" என அழைக்கப்படுகிறது.

## 2.2 நான்மணிக்கடிகை



- ✶ நான்மணிக்கடிகை என்பது ஒரு வகையான ஆபரணம் ஆகும்.
- ✶ நான்மணிக்கடிகையை நான்கு + மணி + கடிகை என பிரிக்கலாம்.
- ✶ இந்த ஆபரணத்தில் முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என நான்கு மணிகள் இருக்கும்.
- ✶ அதுபோல இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான கருத்துகள் இடம்பெறும். இந்நூல் 4 அடிகளைக் கொண்டது.
- ✶ கடிகை என்றால் கட்டுவடம், தோள்வளை, அணிகலன், நாழிகை, துண்டு என பல பொருள் தரும்.
- ✶ இந்நூலில் மொத்தம் 104 வெண்பாக்களை உடையது. இரண்டு கடவுள் வாழ்த்துப் பாடல்களுடன் 106 பாடல்களைக் கொண்டது.
- ✶ இந்நூலில் 2 கடவுள் வாழ்த்துப் பாடல்களும் திருமாலைப் பற்றி கூறுவதால் இந்நூல் வைணவ சமய நூலாகக் கருதப்படுகிறது.
- ✶ இந்நூல் தொல்காப்பியர் கூறும் அம்மை வனப்பு வகையைச் சார்ந்தது.
- ✶ நான்மணிக்கடிகை நூலின் ஆசிரியர் பெயர் விளம்பிநாகனார் ஆவார். இவரின் ஊர் விளம்பி ஆகும்.இவர் கடைச்சங்க காலத்தைச் (4ம் நூற்றாண்டு) சேர்ந்தவர் ஆவார்.
- ✶ இந்நூலின் 7-வது பாடலையும், 100-வது பாடலையும் டாக்டர்.ஜி.யு.போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல் மொத்தம் 127 இனிய கருத்துக்களைக் கூறுகிறது.



> நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றும் மணிமொழிக்கோவை என அழைக்கப்படும்.

**பாடல் - 1 :-**

மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தனக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு. (103)

– விளம்பிநாகனார்

**பொருள் விளக்கம்.**

குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள். அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள் அவள்பெற்ற பண்பில் சிறந்த பிள்ளைகள். மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி. அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எது என்றால், அவர்களிடமுள்ள நல்லெண்ணங்களே.

**பாடல் - 2 :-**

கள்வம் என்பார்க்கும் துயில்இல்லை காதலி மாட்டு
உள்ளம் வைப்பார்க்கும் துயில்இல்லை ஒண்பொருள்
செய்வம் என்பார்க்கும் துயில்இல்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில் (7)

– விளம்பிநாகனார்

**பொருள் விளக்கம்**

கள்வர்களுக்கும் தூக்கம் இல்லை. தலைவியை விரும்பும் தலைமகனுக்கும் தூக்கம் இல்லை. செல்வத்தை ஈட்டுபவனுக்கும் தூக்கம் இல்லை. அச்செல்வத்தைத் திருடு போகாது காப்பவனுக்கும் தூக்கம் இல்லை. எனவே நிலையில்லாப் பொருள்களின்மீது நாட்டம் கொள்ளாமல் மெய்ப்பொருளைத் தேடியடைவதே மனித வாழ்வின் நோக்கமாகும்.

# 3 தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள்

## அலகு -VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

- "என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்" என்று பாரதியும், தமிழ்மொழி தோன்றிய காலத்தை கூற முடியாததனை உணர்ந்த தமிழன்பன் "காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே"! என்று தமிழின் சிறப்பினை தமிழோவியத்தில் கூறுகிறார்.
- புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார் "கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி" என்று தமிழின் சிறப்பினையும் தமிழ்க்குடியின் சிறப்பையும் கூறியுள்ளார்.
- அகம் புறம் என்று இலக்கியம் வகுத்து அவற்றிற்கு இலக்கணம் கூறும் தமிழின் சிறப்புகளான இனிமை, சீர்மை, வளமை, புதுமை, மூத்த மொழி வளம் இவற்றின் சிறப்புகளையும், வடிவங்களையும் காண்பதோடு மட்டுமல்லாமல் தமிழ்மொழியின் பரவல், தமிழினப் பரவல், தமிழ்மொழியின் சிறப்பு, அச்சில் தமிழ், உலகில் முதல் மாந்தனான தமிழன், அவன் தோன்றிய குமரிக்கண்டத்தின் சிறப்புகளையும், திராவிட மொழிகள் குறித்தும், செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்புகளையும் புலவர்கள் தமிழ் பற்றி இயற்றிய பாடல்களையும் தமிழ்மொழியின் சிறப்பு என்ற தலைப்பின் கீழ் விரிவாக காண்போம்.

### மொழி :

- மனித இனம் கண்டறிந்த சிறந்த கண்டுபிடிப்பு – மொழி
- மனிதரைப் பிற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்தியும், மேம்படுத்தியும் காட்டுவது – மொழி
- உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.
- இளமையான, எளிமையான, இனிமையான, வளமையான மொழி – மூத்த தமிழ் மொழி

TAF IAS ACADEMY

### இனிமை மொழி :

- தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமையும் மேன்மையும் உடையது என்று பொருள். இதனைப் பிங்கல நிகண்டு "இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்" என்று கூறுகிறது.
- தமிழானது பழமையும் பல்வேறு பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட இனியமொழி ஆகும்.
- தமிழ் என்னும் சொல் முதன் முதலில் தொல்காப்பியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.
- தமிழ் இலக்கியங்களில் உள்ள இனிமைகள் – ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

– என்று தமிழின் இனிமையை பாரதியார் பாடியுள்ளார்.




### எளிய மொழி :

- உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை – உயிர்மெய்
- தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாக அமைந்துள்ளது.
- வலஞ்சுழி எழுத்துகள் – அ, எ, ஔ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்துகள் – ட, ய, ழ

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே (தொல் : 386) |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் (வஞ்சி – 165) |
| தமிழன் | அப்பர் தேவாரம் | ....தமிழன் கண்டாய் (திருத்தாண்டகம் – 23) |

## சீர்மை மொழி :

- சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.
- தமிழ் மொழியின் பலவகைச் சீர்மைகளுள் குறிப்பிடத்தக்கது சொற்சிறப்பு ஆகும்.
- உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம். உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாததிணை) என்று பெயர் இட்டனர் தமிழ் வளர்த்தவர்கள்.
- பாகற்காய் கசப்புச் சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர். இவ்வாறு பெயரிடுவதிலும் சீர்மை மிக்கது தமிழ்மொழி ஆகும்.

## வளமை மொழி :

- ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ் மொழியின் சிறப்பாகும்.
- தோன்றுவது முதல் உதிர்வது வரை பூவின் ஏழு நிலைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. அரும்பு, | 2. மொட்டு, | 3. முகை, | 4. மலர், |
| 5. அலர், | 6. வீ | 7. செம்மல் | |

- 'மா' – என்னும் சொல்லின் பொருள் – பெரிய , மரம் , விலங்கு, வயல், வண்டு, மேன்மை, அழகு, அறிவு, திருமகள், அழைத்தல், அளவு, துகள்

## வளமை தரும் நூல்கள் :

- இலக்கண நூல்கள் – தொல்காப்பியம், நன்னூல்
- சங்க இலக்கியங்கள் – எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
- அறநூல்கள் – திருக்குறள், நாலடியார்
- காப்பியங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை

## வளர் மொழி :

- தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.
  - இயல்தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும்.
  - இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும்.
  - நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்.
- தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
- தமிழ் உரைநடை வடிவங்கள் – கட்டுரை, புதினம், சிறுகதை
- தமிழ்க் கவிதை வடிவங்கள் – துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள்
- தமிழின் தற்போதைய வடிவம் – அறிவியல் தமிழ், கணினித் தமிழ்

## மூன்று சங்கங்கள்

| சங்கம் | இடம் | ஆதரித்த பாண்டியர்கள் | சங்க உறுப்பினர் | இயற்றிய நூல்கள் | சில புலவர்கள் |
|---|---|---|---|---|---|
| முதல் | தென் மதுரை | 89 பேர் காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை | 549 | பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியா விரை (அகத்தியம் இலக்கணம்) | அகத்தியர், சிவன், முருகன், முரஞ்சியூர் முடிநாக ராயர், நிதியின் கிழவன். |
| இடை | கபாடபுரம் | 59 பேர் வெண்டேர்ச் செழியன்முதல் முடத்திருமாறன் வரை | 59 | பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், இசை, நுணுக்கம் | அகத்தியர், தொல்காப்பியர், மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறு பாண்ட ரங்கன், நிரையனி மாறன், கீரந்தை. |
| கடை | இன்றைய மதுரை | 49 பேர் முடத்திரு மாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை | 49 | நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை,புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, பரிபாடல் கூத்து, வரி, குற்றிசை, பேரிசை, அகத்தியம், தொல்காப்பியம் | சிறுமேதாவி, சேந்தம் பூதன், பெருங்குன்றூர் கிழார், இளந்திரு மாறன், நல்லந்துவனார் மருதன் இளநாகனார், நக்கீரனார். |

## தமிழர்களின் தோற்றம்

- தமிழர் தோற்றம் பற்றி நான்கு வகையான கருத்துக்கள் உள்ளன.
  - தமிழர் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தவர்கள்
  - தென் இந்தியாவின் பழங்குடிகள்
  - ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல் வழியாகத் தென்னிந்தியா வந்தோரின் வழித் தோன்றல்கள்
  - மத்திய ஆசியா, வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தவர்கள்.

## இலக்கியச் சான்றுகள்

- தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை நூல்களாகிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் அக்கால மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையை படம் பிடித்து காட்டுகின்றன.

# 4 தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்

அலகு -VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

## 4.1 உ.வே.சாமிநாத ஐயர்



- உ.வே.சா : உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகன் சாமிநாதன்
- காலம் : 19.02.1855 – 28.04.1942
- இயற்பெயர் : வேங்கட ரத்தினம்
- சிறப்புபெயர் : சாமிநாதன் (ஆசிரியர் வைத்த பெயர்)
- பெற்றோர் : வேங்கடசுப்பையர் – சரசுவதி அம்மையார்
- பிறந்த ஊர் : உத்தமதானபுரம் (திருவாரூர் மாவட்டம்)
- ஆசிரியர் பெயர் : மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்

**கல்வி :**

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரரிடம் கல்வி கற்றார்.
- இவர் சடகோப அய்யங்காரிடம் தமிழ் கற்றார்.
- இவருக்குச் சங்க இலக்கியங்களை அறிமுகம் செய்தவர் – இராமசாமி.
- உ.வே.சா வின் தமிழ்ப்பணிக்கு உதவியவர் – தியாகராஜர்.

**சிறப்பு பெயர்கள் :**

- தமிழ்த்தாத்தா (எனக் கூறியவர் கல்கி)
- மகாமகோபாத்தியாய
- திராவிட வித்யா பூஷணம்
- தட்சிணாத்திய கலாநிதி
- பதிப்புத் துறையின் வேந்தர்

TAF IAS ACADEMY

**பெற்ற பட்டங்கள்:**

- 1906 இல் சென்னை அரசாங்கம் இவருக்கு மகா மகோபாத்தியாய என்ற பட்டத்தை வழங்கியது.
- 1917 இல் பாரத தர்ம மகா மண்டலத்தார் – திராவிட வித்யா பூஷணம் என்ற பட்டத்தை வழங்கினார்.
- 1925 இல் சங்கராச்சாரியார் – தட்சிணாத்திய கலாநிதி என்ற பட்டத்தை வழங்கினார்.
- 1932 இல் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது. (ஆங்கிலேயர் காலம்)

**பணியாற்றியது:-**


- கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர்.
- சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்.
- சிதம்பரம் மீனாட்சித் தமிழ்க்கல்லூரி முதல்வர் (1920).

> உ.வே.சா. தன் வாழ்க்கை வரலாற்றை - என் சரிதம் எனும் தலைப்பில் ஆனந்த விகடனில் 1940 முதல் 1942 வரை எழுதினார்.

# 5 தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள்

அலகு -VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

## 5.1 தேவநேய பாவாணர்



- காலம் : 07.02.1902 முதல் 15.01.1981 வரை.
- ஊர் : சங்கரன்கோவில் திருநெல்வேலி மாவட்டம்.
- பெற்றோர் : ஞானமுத்து – பரிபூரணம்.
- ஆசிரியர் : மாசிலாமணி
- ஆசிரியர் இவருக்கு வைத்த பெயர் : தேவநேசக் கவிவாணர்.
- கல்வி : பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பி.ஓ.எல்.

### கல்வி

- முறம்பிலுள்ள சமயப் பரப்புத்துறை சார்ந்த பள்ளியில் இவர் தொடக்கக் கல்வி பயின்றார். தமக்கையாருடன் ஆம்பூர் சென்று அங்கிருந்த மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் சமயப் பரப்புத் துறை சார்ந்த நடுநிலைப் பள்ளியில் இவர் எட்டாம் வகுப்புவரை தேர்ச்சி பெற்றார்.
- 'எங்கு' என்னும் துரைமகனாரின் கடனுதவி பெற்றுப் பாளையங்கோட்டை திருச்சபை கழக உயர்நிலைப் பள்ளியில் இவர் பதினோராம் வகுப்புவரை பயின்று தேறினார்.
- மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் தேர்விலும், திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கப் புலவர் தேர்விலும் பாவாணர் வெற்றி பெற்றுச் சிறப்புற்றார்.
- பாளையங்கோட்டை பள்ளியில் பயின்றபோது இவரது பாட்டெழுதும் ஆற்றலைக் கண்டு வியந்து இவர்தம் ஆசிரியர் மாசிலாமணி என்பவர் தேவநேசக் கவிவாணர் என்று இவருக்குப் பெயர் சூட்டினார். இவர் தூய தமிழில் 'தேவநேயப் பாவாணர்' என மாற்றிக் கொண்டார்.

### ஆசிரியர் பணி

- தாம் பயின்ற சீயோன்மலை எனப்படும் முறம்பிலுள்ள நடுநிலைப் பள்ளியில் இவர் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார்.
- ஆம்பூர், திருவல்லிக்கேணி, பெரம்பூர், மன்னார்குடி, திருச்சி, மண்ணடி முதலான இடங்களில் இவர் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் சேலம் நகராட்சிக் கல்லூரியில் பன்னிரண்டு ஆண்டுக் காலம் இவர் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிப் பெருமை சேர்த்தார். இறுதியாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் 'திராவிடமொழி ஆராய்ச்சித்துறை' வாசகராக இவர் பணியமர்த்தம் பெற்றுத் தமிழில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்தார்.

### சிறப்புகள்:

- பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக 08.05.1974 ல் பணியாற்றினார்.
- மன்னிப்பு என்பது உருதுச்சொல். பொறுத்துக் கொள்க என்பது மன்னிப்புக்கு ஏற்ற தமிழ்ச்சொல் எனக் கூறியவர்.
- உலகின் முதல் மாந்தன் தமிழன், தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டம் என்பதும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பதும் பாவாணருடைய ஆய்வின் இரு கண்களாகும்.

# 6 தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்

அலகு -VII இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

## 6.1 பாவேந்தர்

### பாரதிதாசன் பற்றிய குறிப்புகள்:




- காலம் : 29 - 04 - 1891 முதல் 21 - 04 - 1964 வரை
- இயற்பெயர் – கனக. சுப்புரத்தினம். (ஊர் – புதுச்சேரி)
- பாரதியார் மீது கொண்ட அன்பினால் தம்பெயரை பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- பெற்றோர் : கனகசபை – இலக்குமி அம்மையார்.
- ஆசிரியர்: திருப்புளிசாமி, பங்காரு பத்தர்
- கல்வி :
  1. தொடக்கக் கல்வியை திருப்புளிசாமியிடம் கற்றார்.
  2. தமிழ் இலக்கண இலக்கியங்களை முதுபெரும்புலவர் பு. அ. பெரியசாமியிடம் கற்றுக் கொண்டார்.
  3. புதுவை கல்வே கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்றார்.
- புலமை பெற்ற மொழிகள் – தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம்
- பணி : புதுவை அரசு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி.
- மனைவி பெயர்: பழநி அம்மையார் (1920)
- நடத்திய கவிதை இதழ்கள் – பொன்னி, குயில் (இலக்கிய இதழ்)
- பாரதிதாசனின் பாடல்களில் சீர்த்திருத்த வேட்கையும், தமிழுணர்வும் பரவலாகக் காணப்படுகிறது.
- பதிவிரதைக்கு இன்னல் வரும், பழையபடி தீரும், பரமசிவர் வந்து வந்து அருள் புரிந்து போவார் என்று தொடக்ககால தமிழ் சினிமாக்களை கிண்டல் செய்து பாடியுள்ளார்.
- இவர் பாரதியாரை முதன் முதலில் சந்தித்த இடம் – வேணுநாயக்கர் வீட்டுத் திருமணத்தின்போது (1909) புதுவையில் பாரதியின் கட்டளைக்கிணங்கப் பாடிய பாடல்.

“எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி
எழுகடல் அவள் வண்ணமடா அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் – அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா ”

→ இப்பாடலை பாரதியார் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது எனக் குறிப்பிட்டுச் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பினார்



- கி.பி. 1929ம் ஆண்டு குடியரசு, பகுத்தறிவு ஆகிய ஏடுகளில் கவிதை, கட்டுரை போன்றவை எழுத ஆரம்பித்தார்.
  (குடியரசு, பகுத்தறிவு ஆகிய பத்திரிக்கையின் ஆசிரியர் தந்தை பெரியார்).
- 1930 ஆம் ஆண்டு “புதுவை முரசு” என்ற ஏட்டில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- தந்தை பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர் – பாரதிதாசன்
- 1938 – இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

## 6.11 உருத்திரங்கண்ணனார்

- இயற்பெயர் : கண்ணனார்
- பிறந்த ஊர் : கடியலூர் (ஊர்ப்பெயரோடு சேர்த்து கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்று அழைக்கப்படுகிறார்).
- தந்தை : உருத்திரன் அல்லது உருத்திரனார்.

### நூல்கள்:

**எட்டுத்தொகையில் பாடியவை:**

- அகநானூற்றில் 167 வது பாடல்
- குறுந்தொகையில் 352 வது பாடல்

**பத்துப்பாட்டில் பாடியவை:**

- பெரும்பாணாற்றுப்படை(பத்துப்பாட்டுள் நான்காவது நூல், 500 பாடலடிகள்)
- பட்டினப்பாலை (பத்துப்பாட்டுள் ஒன்பதாவது நூல், 301 பாடலடிகள்)

### பெரும்பாணாற்றுப்படை



- பெரும்பாணாற்றுப்படை பாணர் குடும்பத்தைப் பற்றி விளக்குகிறது. மேலும், இந்நூல் பாணாறு, சமுதாயப்பாட்டு என்று அழைக்கப்படுகிறது.
- காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய தொண்டைமான் இளந்திரையனின் ஆட்சிச் சிறப்பை எடுத்துரைக்கிறது.
- பெரிய யாழை வைத்திருக்கும் பாணர்கள், பெரும்பாணர்கள் எனப்பட்டனர். மேலும் இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி என்னும் தொடர் மூலம் பேரியாழ்ப் பாணர்கள் சுட்டப்படுகின்றனர். (பேரியாழ் -பெரிய யாழ்)
- சிறு பாணாற்றுப்படையைக் காட்டிலும் அதிக அடிகளைப் பெற்றிருப்பதால் இதை பெரும்பாணாற்றுப்படை எனவும் அழைப்பர்.
- மேலும் இந்நூல் ஊர்ப்பெயர்களை மருவி வழங்குவது, தமிழகத்து ஊர்களைப் பற்றிய அடையாளச் சாயலை மாற்றி விடுவதற்கு வழி வகுத்து விடுகிறது.
- தமிழரின் வணிக அறிவியல், தொழில் நுட்ப ஆற்றல்களை இந்நூல் இனம் காட்டுகிறது.
- சங்க காலத்திலேயே மிகப்பெரிய அளவில் கலங்கரை விளக்கமானது நீர்ப்பாயல்துறையில் அமைந்திருப்பதை இந்நூல் சுட்டிக்காட்டியுள்ளது.
- பெரும்பாணாற்றுப் படையில் முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலமக்களைப் பற்றியும், அந்தணர்களின் இல்ல அமைப்பு முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

# 6.8 பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

- இயற்பெயர் : கல்யாணசுந்தரம்.
- இவரது காலம்: 13-04-1930 முதல் 08-10-1959 வரை.
- பிறந்த ஊர் : செங்கப்படுத்தான் காடு (தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே)
- எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்.
- திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர்
- மக்கள் கவிஞர் (எனக் கூறியவர் ஜீவானந்தம்) என்னும் சிறப்பு பெயரால் அழைக்கப்படுபவர்.
- புனைப்பெயர்: அகல்யா
- சினிமாவில் இருந்தது - 9 ஆண்டுகள்.
- நாட்டுப்புறப் பாடல் மெட்டில் நாட்டம் கொண்டவர்.

## சிறப்புகள்



- பொதுவுடைமைக் கருத்துகளைத் திரைப்படப் பாடலில் தொகுத்தவர்.
- பாரதிதாசனிடன் பாடம் கற்றார்.
- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரை எனது வலது கை என்று புகழ்ந்தவர் பாரதிதாசன்.
- இவரின் முதல் பாடல் - நல்லதைச் சொன்னா நாத்திகனா.
- முதல் திரைப்படம் படித்த பெண் (1959)

## முதல் கவிதை

- ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை
  ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
- மொத்த திரைப்படப் பாடல்கள் - 59
- அவர் கோட்டை நான் பேட்டை என வேடிக்கையாக சொன்னவர்
  - உடுமலை நாராயணகவி
- இவருடைய கவிதைகளை தொகுத்து வெளியிட்டது
  - நியுசெஞ்சரி புத்தக நிலையம்

**சிறப்புப் பெயர்கள்**

- மக்கள் கவிஞர்
- பொதுவுடைமை கவிஞர்
- திரையிசைத் திருவள்ளுவர்
- பாட்டாளி கவிஞர்
- பாடல் மேதை

- இவருக்கு இரு கண்கள் போன்றது - மக்கள் எழுச்சியும், சமுதாய முன்னேற்றமும்
- முப்பது வயதுக்குள்ளாகவே காலனால் பறிக்கப்பட்ட உத்தம கவிஞர், வண்மைக் கவிஞர்,
- திரையிசைப் பாடல்களில் சமுதாய நோக்கை ஏற்றி வைத்துப்பாடிய கவிகளுள் தலைமகன்.
- திராவிட இயக்கத்திலும் கம்யூனிசக் கோட்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டவர்.
- பட்டுக்கோட்டை இயற்றி வந்த கருத்து செறிவும் கற்பனை உரமும் மிகுந்த பாடல்களை ஜனசக்தி எனும் பத்திரிக்கை மூலம் வெளியிடப்பட்டது.
- இவருடைய மணிமண்டபம் பட்டுக்கோட்டையில் (தஞ்சாவூர் மாவட்டம்) அமைந்துள்ளது.

## புகழுரை

- நீ மீண்டும் தோன்றிய பாரதியடா என்று பட்டுக்கோட்டையாரைப் புகழ்ந்தவர் - தோழர் ஜீவானந்தம்
- எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை
  கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
  பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய
  மண்ணின் வாடையும் சேர்ந்து வரும். - ஜெயகாந்தனின் கவிதை

## 6.7 வேலுநாச்சியார்

- காலம் : 1730 - 1796
- தந்தை பெயர் : செல்லமுத்து (இராமநாதபுரம் மன்னரின் ஒரே மகள்)
- தாயாரின் பெயர் : சக்கந்தி முத்தாத்தாள்
- கணவர் பெயர் : முத்துவடுகநாதர் (சிவகங்கை மன்னர்)
- வேலுநாச்சியார் கற்ற மொழிகள் : ஆங்கிலம், பிரஞ்சு, உருது
- வேலுநாச்சியார் பயிற்சி பெற்ற கலைகள் : சிலம்பம், குதிரை ஏற்றம், வாள்போர், வில்பயிற்சி
- அமைச்சர் : தாண்டவராயர்
- ஆண்கள் படைப்பிரிவு தளபதிகள் : சிவகங்கை சிங்கம் சின்னமருது மற்றும் பெரியமருது
- பெண்கள் படை பிரிவு தளபதி : குயிலி
- காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் 1772 ல் சிவகங்கையை ஆண்ட முத்துவடுக நாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார்.
- திண்டுக்கல் கோட்டையில் 8 வருடங்கள் தங்கி ஒரு படையைத் திரட்டிப் பயிற்சி அளித்தார் வேலுநாச்சியார்.
- மைசூரில் இருந்து 5000 குதிரைப்படையை அனுப்பி வைத்தவர் ஐதர் அலி.
- வேலுநாச்சியார் ஐதர் அலியிடம் பேசிய போது பேசியமொழி உருது
- ஆண்கள் படைப்பிரிவிற்கு மருது சகோதரர்களும் பெண்கள் படைப்பிரிவிற்குக் குயிலியும் தலைமை ஏற்றனர்.
- காளையார் கோவில் 1780ம் ஆண்டு வேலுநாச்சியாரால் கைப்பற்றப்பட்டது.







### உடையாளுக்கு நடுகல் :

- விசயதசமி நாளில் சிவகங்கைக் கோட்டைக்குள் செல்வதற்குப் பெண்களுக்கு மட்டும் அனுமதி உண்டு.
- வேலுநாச்சியாரைக் காட்டிக் கொடுக்குமாறு உடையாள் என்னும் பெண்ணை வற்புறுத்திய ஆங்கிலேயர் அவள் மறுத்ததால் அவளைக் கொன்றுவிட்டனர்.
- வேலுநாச்சியாரின் உத்தரவின் பேரில் உடையாளுக்கு நடுகல் நடப்பட்டது. இதற்கு பரிந்துரை செய்தவர் அமைச்சர் தாண்டவராயர்.
- விசயதசமிக்கு முதல்நாள் சிவகங்கையை நோக்கிப் புறப்பட்டபோது உடையாளின் நடுகல்லுக்கு தான் வைத்திருந்த தாலியைக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார் – வேலுநாச்சியார்.
- பெண்கள் படைப்பிரிவின் பெயர் – உடையாள்

> ✍ ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி – வேலுநாச்சியார்.

# 6.4 கண்ணதாசன்



- இயற்பெயர் : முத்தையா
- சிறப்புப் பெயர்: கவியரசு, இயற்றமிழ் கவிஞர், சிறுகூடல் பட்டியிலே தோன்றிய பாட்டு பறவை,
- வளர்ப்பு தாய் சூட்டிய பெயர்: நாராயணன்
- வளர்ப்பு தாய்: தெய்வாணை ஆச்சி
- காலம் 24-06-1927 முதல் 17-10-1981 வரை
- பிறந்த ஊர்: சிறுகூடல் பட்டி (சிவகங்கை மாவட்டம்).
- பெற்றோர் : சாத்தப்பன் – விசாலாட்சி.
- எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர்.
- இவருடைய மணிமண்டபம் அமைந்துள்ள இடம் – காரைக்குடி
- தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர். (1978)
- திரைப்படத்துறைக்கு அறிமுகப் படுத்தியவர் இயக்குனர் – ராம்நாத்
- காதல், தத்துவம் பாடுவதில் வல்லவர்.
- பழந்தமிழ் இலக்கியத்தின் உயிர்ச்சாரத்தையெல்லாம் தமது பாடல்களிலே எடுத்தாண்டவர்.
- சேலம் மாவட்டம் சலகண்டாபுரம் (சலங்கை) பா. கண்ணன் என்ற நாடக ஆசிரியரின் தாசன்.
- பாரதியாரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்டார்.
- கிரகலட்சுமி பத்திரிக்கையில் வெளிவந்த இவரின் முதல் கதை – நிலவொளியிலே (17 வயதில்)
- திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் – கண்ணதாசன்.
- சிறந்த கவியரங்கக் கவிஞர், பேச்சாளர்
- தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர். – கண்ணதாசன்

- கதை வசனம் எழுதிய முதல் திரைப்படம் – இல்லற ஜோதி
- கண்ணதாசனின் முதல் திரை இசைப்பாடல் (1949) – கலங்காதிருமனமே (கண்ணியின் காதல்)
- கடைசி பாடல் – கண்ணே கலைமானே (1981) (மூன்றாம் பிறை)

## புனைபெயர்கள்

- தமிழ் மன்னன்
- துப்பாக்கி
- ஆடிய பாதம்
- ஆரோக்கியசாமி
- பார்வதி நாதன்
- காரை முத்துப்புலவர்
- வணங்காமுடி
- கமக பிரியன்